**வத்தேகம நகர சபை**
**கண்டி மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூலை 07 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து வத்தேகம நகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச அபிவிருத்தி வங்கியின் 02 நிலையான வைப்புக்களுக்குரிய வட்டி ரூபா 23,357 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இ உள்ளவாறு சபைக்குச் சொந்தமான மக்கள் வங்கியில் காணப்பட்ட நிலையான வைப்புக்களின் வட்டி வருமானம் ரூபா 64,331 ஆல் குறைத்துக் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

மூன்று வெளித்தரப்பினர்களால் சபைக்கு எதிராக தொடர்ந்த 3 வழக்குகள் தொடர்பாக கணக்குகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

#### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பொதுக் களஞ்சிய இருப்பின் பெறுமதி ரூபா 3,516,563 ஆக இருந்த போதிலும் பயன்பாட்டு பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 2,981,810 ஆக இருந்தமையால் ரூபா 534,753 தொகையான வேறுபாடு கண்டறியப்பட்டது.

**1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 9,352,793 தொகையாக இருந்ததுடன், அதில் 1-5 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 429,913 ஆகவும் 5 வருடங்களிற்கு மேற்பட்ட கணக்கு மீதிகள் ரூபா 1,452,025 ஆகக் காணப்பட்டது.

**(ஆ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காணப்பட்ட 2 கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 11,082,806 ஆக இருந்ததுடன் இதில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட மீதிகள் ரூபா 354,772 ஆக இருந்தது.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தால் ரூபா 6,624,210 தொகையான கொடுக்கல் வாங்கலகளை கணக்காய்வின் போது திருப்திரகமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/03 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் | |
| (i) 10 ஆம் பந்தி | குத்தகை உடன்படிக்கை செய்யப்பட்ட கடைகளை உப குத்தகைக்கு வழங்குவது முழுமையாக தடை செய்யப்பட்டுள்ள போதிலும், 2016 நவம்பர் 09 ஆந் திகதிய வெளிக்கள பரிசோதனையின் போது குத்தகையாளரால் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த கடைகளின் எண்ணிக்கை 04 ஆக இருந்தது. |

| | |
|---|---|
| (i) 19 ஆம் பந்தி | குத்தகையாளர் மற்றும் சபையினால் புதிய உடன்படிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய போதிலும் 2016 நவம்பர் 10 ஆந் திகதி வரையிலும் 16 கடைகளின் குத்தகையாளர்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23(அ) பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள 1533/16 மற்றும் 2008 சனவரி 25 ஆந் திகதிய சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரினால் வழங்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானிப் பத்திரம் | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய 29 வியாபார நிறுவனங்களுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் ரூபா 127,600 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. காலாவதியான 03 அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினங்களை விஞ்சிய வருமானம் ரூபா 9,490,412 ஆகக் காணப்பட்டதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,076,577 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,413,835 அதிகரிப்பொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,413,835 ஆன அதிகரிப்பிற்கு 03 வருமான விடயங்களில் அதிகரிப்பு மற்றும் பிரயாணச் செலவின விடயத்தின் குறைவு அடிப்படையான காரணமாக இருந்தது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

2016, 2015 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் தொழிற்படு மூலதன மாற்றங்கள் 2.1:1, 2.5:1 மற்றும் 2.1:1 என்ற வகையில் இருந்தன.

**2.4 வருமான நிர்வாகம்**

**2.4.1 வீத வரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட வீத வரி மீதி ரூபா 2,279,168 தொகையாக இருந்ததுடன் மீளாய்வாண்டில் பட்டியல் இடப்பட்டவை ரூபா 5,419,810 ஆக இருந்தது. இம்மீதிகளில் இதில் மீளாய்வாண்டின் போது அறவீடுகள் முறையே 67 சதவீதமாகவும் 61 சதவீதமாகவும் காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 3,158,364 ஆக இருந்ததுடன், அம்மீதியில் ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்த ரூபா 736,014 ஆன மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் 9 அரச நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவையான வீத வரி மீதி ரூபா 377,386 ஆக இருந்தது. இந் நிலுவை 3 மாதங்கள் முதல் 12 ஆண்டுகளுக்கு இடைப்பட்டிருந்தன.

**2.4.2 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் வியாபார வரி அறவிடப்பட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக முறையான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4.3 ஏனைய வருமானம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) முச்சக்கர வண்டி நிறுத்துமிட கட்டணங்கள்**

2010 திசெம்பர் 12 ஆந் திகதிய உப விதி மூலம் முச்சக்கர வண்டிகள் நிறுத்துமிடங்கள் 27 இனங்காணப்பட்டிருந்ததுடன் அந்த இடங்களில் முச்சக்கர வண்டிகளை நிறுத்துவதற்காக முறையான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாமையால் முச்சக்கர வண்டி உரிமையாளர்களிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கு முடியாமல் இருந்தது.

**(ஆ) நீர்க் கட்டணம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 2,470,146 ஆக இருந்ததுடன், அம்மீதிகளில் ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்த ரூபா 352,861 ஆன மீதியொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

சபை நிதியத்திலிருந்து செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 26 உத்தேச திட்டங்களில் 04 மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தன. நிர்மாண வேலைகளை செயற்படுத்துவதற்கான அங்கீகாரம் 2016 திசெம்பர் 20 ஆந் திகதி தாமதமாகி கிடைத்திருந்தமையால் 22 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான பழைய நூலக கட்டிடத்தின் மேல் மாடி தொழில் பயிற்சி அதிகாரசபையால் பயிற்சி நிலையமொன்றாக வருடக் கணக்காக பேணிச்செல்லப்பட்டு வந்திருந்த போதிலும், அந்நிறுவனத்திடமிருந்து எவ்வித அறவீடொன்றும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் உடன்படிக்கையொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 12 ஆம் இலக்க ஆட்டிறைச்சிக் கடை மற்றும் 15 ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடை என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கு அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்த போதிலும் அந்த 02 கடைகளுக்காக கேள்விதாரர் தொடர்ந்தும் முன்வந்திருக்கவில்லை. இக்கடைகளை வேறு வியாபார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தி சபையின் வருமானத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான கடையொன்று கேள்வி நடைமுறை பின்பற்றி குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்காக நகர சபை கட்டளைச் சட்டத்தின் 36 (உ) 11 ஆம் பிரிவின் பிரகாரம் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் 19,20,21 மற்றும் 46 ஆம் இலக்க 04 கடைகளை 2000 ஆம் ஆண்டு முதல் 2017 மார்ச் 20 வரை மீன் விற்பனைக்காக நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை 256 கட்டிட அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் 69 இற்காக மாத்திரம் இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தன.

**3.4 விளைவற்ற / குறைப்பயனபாட்டிலான சொத்துக்கள்**

(அ) சபைக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிலொன்று, இரண்டு உழவு இயந்திரங்கள், பெக்கோ இயந்திரமொன்று மற்றும் பியெட் வகை காரொன்று விளைவற்ற வகையில் அலுலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 333,700 பெறுமதியான தளபாட இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் மூலம் வழங்கப்பட்டிருந்த டிரம் டிரரக் மற்றும் பெக்கோ இயந்திரத்தின் சாரதிகளின் பற்றாக்குறை காரணமாக விளைவற்ற வகையில் அலுலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், விளைவற்ற வகையில் காணப்பட்ட இவ்வாகனங்களுக்காக செலவிடப்பட்டிருந்த பராமரிப்புச் செலவினம் ரூபா 248,471 ஆக இருந்தது.

(இ) 2014 பெப்ரவரி 25 ஆந் திகதி உள்ளூராட்சி திணைக்களத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 369,873 பெறுமதியான கணனி உபபாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன 2016 நவம்பர் 10 ஆந் திகதி வரையிலும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் விளைவற்ற வகையில் வைக்கப்பட்டிருந்தன.

(ஈ) சபை அதிகாரப் பிரதேசத்தில் சிறுவர் சிறுமியருக்கு நலன்புரி சேவைகளை வழங்குவதற்காக நீண்டகாலமாக சபையில் பேணப்பட்டிருந்த கலை கூடம் 2014 ஆம் ஆண்டு முதல் செயற்படாதிருந்தமையால் ரூபா 193,500 பெறுமதியான இசை கருவிகள் விளைவற்றுக் காணப்பட்டன.

**3.5 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் 2 ½ தொன் அளவிலான கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்படுவதுடன், உக்கும் கழிவுப் பொருட்கள் குண்டசாலை பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. கழிவுப் பொருட்கள் பிரிப்பது தொடர்பில் மக்களுக்கு அறிவூட்டுதல் இடம்பெற்றிருந்த போதிலும் கழிவுப் பொருட்களை வேறுபடுத்தாமையால் பாரிய செலவினமொன்றை மேற்கொள்ள நேர்ந்திருந்தது.

**4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டில் வருமானம் மற்றும் செலவின விடயங்களுக்கு இடையே நிதிஏற்பாடுகள் மாற்றப்பட்ட பின்னரும் பாதிடடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் செலனின விடயங்களுக்கிடையே கருத்திற் கொள்ளக்கூடிய வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) கணக்கீடு
(இ) வாகனக் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிர்வாகம்
(உ) கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர்